

புதுடெல்லியில் நேற்று முன்தினம் (13.10.2023 ) நடைபெற்ற 9வது G20 உறுப்பு நாடுகளின் நாடாளுமன்ற சபாநாயகர்கள் உச்சி மாநாட்டின் (P20) தொடக்க விழாவில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் கலந்துகொண்டார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் டிசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் 2023 போட்டிக்காக முதற்கட்டமாக ரூ.15 கோடி உரிமைத்தொகை மற்றும் செயல்பாட்டுத் தொகையினை 12.10.2023 அன்று சென்னை, முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விளையாட்டு அமைப்பாளர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் பார்முலா ரேசிங் சர்க்யூட் விளையாட்டு அமைப்பாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கோரிக்கையை ஏற்று

# கோவை துடியலூர் வேளாண்மை சேவை கூட்டுறவு சங்கம் கலப்பு உரம் தயாரிக்க அனுமதி!

## ஒன்றிய ரசாயனம் - உர அமைச்சகம் உத்தரவு!

நாமக்கல், அக். 15 -

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கோரிக்கையை ஏற்று, கோவை துடியலூர் வேளாண்மை சேவை கூட்டுறவு சங்கத்தின் கலப்புஉரம் தயாரிப்பு அலகை மத்திய இணைய முகப்பில் பதிவு செய்ய அனுமதி வழங்கி, ஒன்றிய ரசாயணம் மற்றும் உரங்கள் அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கோவை துடியலூர் வேளாண்மை சேவைகள் கூட்டுறவு சங்கம் இயங்கி வருகிறது. இச்சங்கத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இச்சங்கம் ஒன்றிய அரசின் அனுமதியோடு நீண்ட காலமாக கலப்புஉரத் தயாரிப்பு செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறது. சமீபத்தில் ஒன்றிய அரசு பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் உரத் தயாரிப்பு மையங்கள் அனைத்தும் ஒன்றிய அரசின் இணைய முகப்பில் பதிவு செய்ய வேண்டும் எனவும், அதற்கான பதிவு செய்ய காலக்கெடு முடிவடைந்து நிலையில் துடியலூர் வேளாண்மை சேவைகள் கூட்டுறவு சங்கத்தினை, பல்வேறு காரணங்களால் இணைய முகப்பில் பதிவு செய்ய முடியாமல் போனது.

இதனையடுத்து, ஒன்றிய அரசின் இணைய முகப்பில் பதிவு செய்ய காலநீட்டிப்பு செய்ய வேண்டும் என துடியலூர் வேளாண்மை சேவைகள் கூட்டுறவு சங்கத்தினர் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமாரிடம் கோரிக்கை விடுத்து இருந்தனர்.

இதையடுத்து ஒன்றிய குடும்ப நலன், இரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் டாக்டர்.மன்சுக் மாண்டவியா அவர்களை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி டில்லியில் சந்தித்து துடியலூர் வேளாண்மை சேவைகள் கூட்டுறவு சங்கத்தினரின் கோரிக்கையை எடுத்துரைத்தார்.

விவசாயிகளின் துயர் துடைக்க ஒன்றிய குடும்ப நல மற்றும் ரசாயனங்கள் மற்றும் உரத்துறை அமைச்சருக்கு கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி எழுதியுள்ள கடிதத்தில், 1955 ஆம் ஆண்டு முதல் டி யூ இ சி எஸ் என அறியப்படும் துடியலூர் கூட்டுறவு வேளாண்மை சங்கம் தரமான இடுபொருட்களை வழங்குவதன் மூலம் விவசாயிகளுக்கு சேவை செய்து வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு லிமிடெட், தி துடியலூர் கூட்டுறவு வேளாண்மை சங்கம், என்.சி.எம்.எஸ ஆகிய மூன்றும் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்படும் கலப்புஉரம் அலகுகள் ஆகும்.

எருக்கலவைகளை உற்பத்தி செய்ய, இந்தக் கலவை அலகுகள் என்பிகே ஊட்டச்சத்துக்களின் அடிப்படையில் உரக்கலவைகளை உற்பத்தி செய்கின்றன. நேரடி உரங்களான யூரியா டி.ஏ.பி,சூப்பர் பாஸ்பேட், எம்.ஓ பொட்டாஷ் போன்றவை வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் வழிகாட்டுதல் மற்றும் உரிமத்தின் அடிப்படையில் நேரடியாக கூட்டுறவு சங்கத்தில் இருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன.

மத்திய ரசாயன மற்றும் உரத்துறையின் வழிகாட்டுதல்படி, ஒருங்கிணைந்த நிதி மேலாண்மை அமைப்பின் இணைய முகப்பில் துடியலூர் வேளாண்மை சேவைகள் கூட்டுறவு சங்க கலப்பு உரத் தயாரிப்பு அலகினை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் தொழில்நுட்பக் கோளாறின் காரணமாக இணைய முகப்பில்பதிவு செய்ய சிக்கல் ஏற்பட்டது. எனவே தாங்கள் விவசாயிகளின் நலன் கருதி மாநில ஒருங்கிணைப்பாளருக்கு சிக்கலைத் தீர்க்க அறிவுறுத்தும் படி கேட்டுக் கொள்கிறேன் என கூறியுள்ளார்.

இதையடுத்து, கே.ஆர்.என்.இ ராஜேஸ்குமார் எம்.பி யின் இந்த கோரிக்கையை ஏற்று ஒன்றிய ரசாயணம் மற்றும் உரத்துறை அமைச்சர் டாக்டர்.மன்சுக்மாண்டவியா தமிழ்நாடு விவசாயத் துறை இயக்குனருக்கு வரும் 27 ஆம் தேதி வரை கோவை துடியலூர் வேளாண்மை சேவை கூட்டுறவு சங்கத்தின் கலப்பு உரத் தயாரிப்பு அலகை மத்திய இணைய முகப்பில் பதிவு செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி யின் இந்த கோரிக்கையை ஏற்று, கோவை துடியலூர் வேளாண்மை சேவை கூட்டுறவு சங்கத்தின் கலப்பு உரத் தயாரிப்பு அலகை மத்திய இணைய முகப்பில் பதிவு செய்ய அனுமதி வழங்கியுள்ளதால் துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் அவர்களது குடும்பத் தார் மற்றும் இந்நிறுவனத்திலிருந்து பயன்பெறும் விவசாயிகள் நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமாருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

### இஸ்ரேல் நாட்டில் சிக்கித் தவித்த

# 21 தமிழர்கள் பத்திரமாக தாயகம் திரும்பினர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

சென்னை, அக்.15-

இஸ்ரேல் நாட்டின் போர்ச் சூழலில் சிக்கித் தவித்த 21 தமிழர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஏற்பாட்டால் பத்திரமாக தாயகம் திரும்பியதுடன் அரசின் செலவில் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இதுகுறித்து அயலகத் தமிழர் நலத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :-

இஸ்ரேல் - பாலஸ்தீனம் நாடுகளுக்கு இடையேயான போர் தற்போது தீவிரமடைந்து வரும் நிலையில் தமிழர்கள் பலர் தாயகம் திரும்ப இயலாமல் அங்கு சிக்கித் தவிக்கின்றனர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி அங்குள்ள தமிழர்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் உதவி எண்கள் வெளியிட்டு அவர்களது விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்திடமும், இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகத்திடமும் பகிரப்பட்டு அவர்களை தாயகம் மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் வாட்சப் குழுக்கள் அமைக்கப்பட்டு அங்குள்ளதமிழர்களின் நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேல் நாட்டில் சிக்கித் தவித்த தமிழர்களில் தாயகம் திரும்புவதற்காக பதிவு செய்த நபர்களில் கோயம்புத்தூர், திருவாரூர், கடலூர், திருச்சி, தேனி, கரூர், விருதுநகர், நாமக்கல், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், சென்னை முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த 21 தமிழர்கள் ஒன்றிய அரசின் ஆபரேஷன் அஜய் திட்டம் மூலம் முதற்கட்டமாக 12.10.2023 அன்று இஸ்ரேலில் இருந்து புறப்பட்டு சிறப்பு விமானத்தில் நேற்று முன்தினம் (13.10.2023) காலை 6 மணிக்கு புது டெல்லி வந்தடைந்தனர்.

புது டெல்லி விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் வரவேற்பு மையம் அமைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. மேலும் தமிழ்நாடு அரசு செலவில் விமான பயணச் சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு 14 நபர்கள் சென்னை விமான நிலையத்திற்கும், 7 நபர்கள் கோயம்பத்தூர் விமான நிலையத்திற்கும் வந்தடைந்தனர்.

சென்னை விமான நிலையத்திற்கு வந்தடைந்த 14 தமிழர்களையும், தமிழ்நாடு அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், பாராளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி மற்றும் அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் திருமதி. ஜெசிந்தா லாசரஸ் ஆகியோர் வரவேற்று, அவர்களது சொந்த ஊர்களுக்கு செல்ல வாகன வசதியும் ஏற்பாடு செய்து தரப்பட்டது.

கோயம்பத்தூர் விமான நிலையம் வந்தடைந்த 7 தமிழர்களையும், கோயம்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வரவேற்று அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார்.




